[2nd July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி எல்லா வகையிலும் இந்த மன்றத்தின் அபிப்பிராயங்கள் கோரப்படும். நான் ஆரம்பத்திலே சொன்னபடி இதைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் இந்தக் குழு திருத்தியமைத்த பிறகு, அதன் யோசனையைக் கேட்டு இந்த சபை முன்பு வைக்கப்பட்ட பிறகு தான் இந்த மசோதா சட்டமாக்கப்படும்.

Panchayat Union Council, Singampunari

69 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state the amount allotted to the Panchayat Union Council of Singampunari, Ramanathapuram district for the year 1960–61?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The following grants were released to the Union during 1960–61.

Local Education Grant of Rs. 1,15,780 and Local Roads Grant of Rs. 13,035.

திரு. எஸ். மாதவன்: இந்தத் தொகை யூனியன் டெரிடரியின் பரப்பளவைப் பொறுத்து அளிக்கப்படுகிறதா அல்லது மக்களின் தொகை கணக்கை வைத்து அளிக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுபற்றி ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, may I know from the Hon. Minister whether any special allotments are made to the Panchayat Union Councils?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பு கூறியது போல், அந்தச் சட்டத்தில் எந்தெந்த வகையிலே சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த வகையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திரு. ம. கமலநாதன்: கிராண்டுகள் வழங்குவதிலே சட்டத்தை திருத்துவதற்கு அவசியம் இருக்கிறது. சில யூனியன்கள் பரப்பு அளவிலே மிகப் பெரியதாகவும், சில யூனியன்கள் பரப்பு அளவிலே மிகச் சிறியதாகவும் இருக்கின்றன. அந்த யூனியன்களுக்கு ரோடுகள் வசதி செய்வதற்கு மக்கள் தொகையின் அடிப்படையிலே ஒரு ஆளுக்கு 40 நயா பைசா வீதம் ஒதுக்கப்பட்டிருப்பதால், மிக அதிகப் பரப்பு உள்ள யூனியன்கள் ரோடு வசதி செய்து கொடுப்பதற்கு முடிவதில்லை. ஆகவே, கிராண்டுகள் வழங்குவது சம்பந்தமாக சட்டம் திருத்தி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தப் புதிய சட்டம் சமீபத்தில் தான் அமுலுக்கு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கும், மேலும் எந்தெந்த வகை

விலே திருத்தவேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்வதற்கும் ஒரு ஆலோசனைக்குழு 'கன்சல்டேடிவ் கமிட்டி' அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் பஞ்சாயத்து யூனியன் டெவலப்மெண்டு கவுன்சில் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய யோசனைகளெல்லாம் கேட்டு எந்தெந்த வகையிலே திருத்தவேண்டுமோ அம்மாதிரி திருத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட யோசனையை எனக்கு எழுதி அனுப்பினால், அதையும் பரிசிலனை செய்து, சட்டத்தை திருத்துவதற்கு அவசியம் இருக்கிறதா என்பதைப்பற்றி மேலும் யோசித்து முடிவு செய்யலாம்.

New Universities

***71 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon.** the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any suggestions from the University for the establishment of four more Universities in the State, viz., at Madurai, Karaikudi, Tiruchirappalli and Coimbatore; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. சா. கணேசன்: காரைக்குடி போன்ற இடங்களிலே, குறிப்பாக காரைக்குடியில், 'மாண்டிசேரியிலிருந்து' 'ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்' வரையிலே எல்லாம் ஒரே வட்டாரத்தின் உள்ளே அமைந்திருப்பதால் அங்கே சர்வகலாசாலை ஏற்படுத்துவதற்கு இடமும், சூழ்நிலையும் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளுமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு முழு யூனிவர்சிடி அமைப்பது என்றால், மதுரையில் அமைப்பது தான் பொருத்தம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களும் ஒப்புக்கொள்ளுவார்கள். எப்படியும் இன்னொரு பல்கலைக்கழகம் மதுரையில் அமைக்க வேண்டும் என்ற கருத்து எனக்கும் இருக்கிறது, அரசாங்கத்திற்கும் இருக்கிறது. அதைப்பற்றி மேலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். 'புல் ப்ளெட்ஜ்டு யூனிவர்சிடி' இல்லாமல் வேறு ஏதாவது செய்வதாக இருந்தால், அதைப்பற்றி யோசனை இருந்தால், அதையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: பல்கலைக்கழகங்களை அதிகப் படுத்துவதில் இப்பொழுது இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்கள் யோசனை கூறுவிட்டாலும், அரசாங்கமே முயற்சி எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதுவும் மதுரையில் வருவதாக அபிப்பிராயம் இருப்பதாகச் சொன்னார்கள். எங்கு வைத்தாலும் சரி, புதிய பல்கலைக்கழகம் நம்முடைய ராஜ்யத்தில்